# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2028/34 - 2017 ජූලි මස 19 වැනි බදාදා - 2017.07.19

*2028/34 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு யூலை மாதம் 19 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பீ. 21/78* (XV)

**1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்**

*27(1) ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 27 (1) ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு, உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல ஆகிய நான், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் விதப்புரையின் மேல், இலங்கை ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் பீடங்களையும், துறைகளையும் குறித்துரைக்கின்றதும், அக்கட்டளை மேற்கூறப்பட்ட சட்டத்தின் 139 ஆம் பிரிவின் ஏற்பாடுகளினது பயனைக்கொண்டு சொல்லப்பட்ட சட்டத்தின் 21 ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட கட்டளையொன்றாகக் கருதப்படுவதுமான (2016 திசெம்பர் 01 ஆந் திகதிய 1995/24 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளையினால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறானதுமான) 2009, மே 28 ஆந் திகதிய 1603/35 ஆம் இலக்க, அதி விசேட வர்த்தமானியிலும் 2011, யூன் 24 ஆந் திகதிய 1711/24 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியிலும் வெளியிடப்பட்ட கட்டளைக்கான அட்டவணையை, "பீடம்" என்ற தலைப்பின் கீழ் மேற்சொல்லப்பட்ட கட்டளைக்கான அட்டவணையின் I ஆம் நிரலில் காணப்படுகின்றதும் அத்துடன் "துறை" என்ற தலைப்பின் கீழ் அத்தகைய அட்டவணையின் II ஆம் நிரலில் காணப்படும் அதனது நேரொத்த பதிவுகளிலும் "மானிடவியல் மற்றும் சமூக விஞ்ஞானங்கள் பீடம்" என்னும் விடயத்திற்குப்பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலம் இக்கட்டளையால் திருத்துகின்றேன் :-*

**அட்டவணை**

| *"நிரல் I* | *நிரல் II* |
|---|---|
| *பீடம்* | *துறை* |
| மானிடவியல் மற்றும் சமூக விஞ்ஞானங்கள் பீடம் | 1. பொருளியல் துறை |
| | 2. சமூகப் புள்ளிவிபரவியல் துறை |
| | 3. புவியியல் துறை |
| | 4. சிங்களம் மற்றும் மக்கள் தொடர்பாடல் துறை |
| | 5. வரலாறு மற்றும் தொல்பொருளியல் துறை |



இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

**அட்டவணை** *(தொடர்ச்சி)*

| *நிரல் I* | *நிரல் II* |
|---|---|
| *பீடம்* | *துறை* |
| | 6. பாளி மற்றும் பௌத்த கற்கைகள் துறை |
| | 7. மொழிகள் மற்றும் கலாசார கற்கைகள் துறை |
| | 8. ஆங்கிலம் மற்றும் மொழியியல் துறை |
| | 9. அரசியல் விஞ்ஞானத் துறை |
| | 10. குற்றவியல் மற்றும் குற்ற நீதித்துறை |
| | 11. சமூகவியல் துறை |
| | 12. மனித இன இயல் துறை". |

லக்ஷ்மன் கிரியெல்ல,
உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள்
அமைச்சர்.

கொழும்பு,
2017, யூலை 14.

8- 143